யா/ ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.

J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College

முதலாம் தவணைப் பரீட்சை-2020
First Term Examination-2020

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I, II Information & Communication Technology I, II	T	I, II	இரண்டு மணித்தியாலம் Two Hours

தரம் 7 **தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்**

பகுதி I

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. கணினி மென்பொருளுக்கு உதாரணமாக அமையாதது
1. பணிச்செயல் முறைமை 3. சொல்முறைவழிப்படுத்தல்
2. தெரிவிப்பி 4. இலத்திரனியல் விரிதாள்

02. மையமுறைவழி அலகு குறிப்பது
1. UPS 2. ICT 3. CPU 4. IOS

03. 1 மைக்ரோ செக்கன் எதற்கு சமனானது
1. 0.0001s 2. 0.1s 3. 0.000s 4. 0.001s

04. மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்படும் தொழினுட்பம்
1. வெற்றிடக்குழாய் 2. திரான்சிஸ்ரர் 3. ஒருங்கிணைசுற்றுக்கள் 4. நுன்முறைவழியாக்கி

05. ALU குறிப்பது
1. மையமுறைவழி அலகு 3. பணிச்செயல்முறைமை
2. கட்டுப்பாட்டலகு 4. எண்கணித, தருக்க அலகு


06. ஒளியியல் ஊடக சாதனங்களுக்கு உதாரணமாக அமையாதது
1. CD 2. DVD 3. நெகிழ்வட்டு (Floppy disk) 4. Blu-ray

07. மனிதனுக்கும் கணினிக்கும் இடையே தொடர்பாடலை ஏற்படுத்துவது
1. இலத்திரனியல் விரிதாள் 3. மைய முறைவழி அலகு
2. பணிச்செயல்முறைமை 4. கட்டுப்பாட்டு அலகு

08. கணினி ஆய்வுகூடத்தில் செய்யக்கூடாதது
1. பாதணிகளைக் கழற்றி உள்ளே செல்லல்
2. விளையாடுதல்
3. தூசுகளைத் தட்டுதல்
4. உணவுப் பொருட்களை உள்ளே கொண்டு செல்வதைத் தவிர்த்தல்

09. உள்ளீட்டுச் சாதனமாகவும் வெளியீட்டுச் சாதனமாகவும் பயன்படுவது எது?
1. தெரிவிப்பி 2.சுட்டி 3.தொடுதிரை 4.அச்சுப்பொறி

www.ikedu.lk

10. பாய்ச்சல் கோட்டுப் படத்தில்  குறிப்பது
1. ஆரம்பம் 2. முடிவு 3. உள்ளீடு 4. முறைவழியாக்கல்

11. Ctrl + x குறிப்பது
1. வெட்டுதல் (Cut) 2. பிரதி செய்தல் (Copy) 3. ஒட்டுதல் (Paste) 4. சேமித்தல் (Save)

12. பின்வருவனவற்றுள் எது திண்மநிலைச் சாதனமாகும்?
1. பளிச்சீட்டு நினைவகம் 2. வன்வட்டு 3. DVD 4. மேற்கூறிய யாவும்

13. இறுவட்டுக்களின் கொள்திறன் பற்றிய கூற்றுக்களில் சரியானது
1. 25GB 2. 4.7GB 3. 650 MB – 700MB 4. 200MB – 400MB

14. கோப்பின் முக்கிய இரு பகுதிகள் முறையே
1. பெயர், வடிவம் 2. பருமன், அளவு 3. பெயர், நீட்சி 4. நீட்சி, வடிவம்

15. கணினியின் இயல்பு அல்லாதது
1. வேகம் 2. நுண்ணறிவு 3. செயற்றிறன் 4. செம்மை

16. Paint இல் வட்டம் வரையப் பயன்படுவது
1.  2.  3.  4. 

17. இரண்டாம் தலைமுறைக் கணினியில் கதி அளக்கப்படும் அலகு
1. நனோ செக்கன் 2. மைக்ரோ செக்கன் 3. மில்லி செக்கன் 4. பிக்கோ செக்கன்

18. 1 mhz இற்கு சமமானது
1. 100 Hz 2. 1000 Hz 3. 1000 GHz 4. 1000000Hz

19. IOT என அழைக்கப்படுவது
1. சர்வதேச வலையமைப்பு
2. இணையத் தொழினுட்பம்
3. பொருட்களின் இணையம்
4. மின்வர்த்தகம்

20. கணினியின் எப்பகுதியானது CCTV இனால் பாதுகாக்கப்படுகின்றது?
1. நிலைபொருள்
2. உயிர்ப்பொருள்
3. மென்பொருள்
4. வன்பொருள்

(40 புள்ளிகள்)

பகுதி II

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

01] 01. கணனியின் மூளை எனக் குறிப்பிடப்படும் பகுதி எது?
02. CPU இன் மூன்று பகுதிகளையும் தந்து அவற்றின் தொழில்களையும் தருக ?
03. மைய முறைவழி அலகு பொருத்தப்பட்டிருக்கும் பகுதி எது ?
04. CPU யின் விரிவு யாது ?

(10 புள்ளிகள்)

02] 01. கோப்பிற்கு வரைவிலக்கணம் தருக ?
02. கோப்பின் பண்புகள் 03 தருக ?
03. கோப்பிற்கும் கோப்புறைக்கும் இடையிலான வேறுபாடுகளைத் தருக ?
04. ஆவணங்களை கோப்புறையினுள் சேமிப்பதன் நன்மைகளைத் தருக ? **(10 புள்ளிகள்)**

www.ikeu.lk

03] 01. கணினி தேக்க சாதனங்கள் எதை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை எவை ?
02. வன்வட்டுக்களின் இரு வகைகளும் எவை ?
03. லேசர் கதிர் மூலம் தரவுகளை வாசிக்கவும் எழுதவும் பயன்படும் தேக்க சாதனத்தின் வகை எது ?
04. DVD யின் விரிவு யாது?

(10 புள்ளிகள்)

04] 01. பணிச்செயல்முறைமையின் முக்கிய பணிகள் 3 தருக ?
02. பணிச்செயல்முறைமைக்கு 3 உதாரணம் தருக?
03. திறந்த மூல மென்பொருளுக்கு 2 உதாரணம் தருக ?
04. உமக்குத் தெரிந்த மென்பொருள்களில் 3 இனைக் குறிப்பிடுக ?

(10 புள்ளிகள்)

05] 01. கணினியின் வன்பொருள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் ஏறப்டக்கூடிய செயல்கள் தருக ?
02. கணினியின் மென்பொருள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்கள் ஏறப்டக்கூடிய சந்தரப்பங்களைக் குறிப்பிடுக ?
03. கணினி ஆய்வுகூடதில் நீர் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள் 5 குறிப்பிடுக ?
04. கணினி ஆய்வுகூடதில் நீர் செய்யத்தகாத நடவடிக்கைகள் 5 குறிப்பிடுக ?

(10 புள்ளிகள்)

06] 01. காப்பு நகல் என்றால் என்ன?
02. கடவுச் சொல் ஒன்றை உருவாக்கும் போது நீர் கவனிக்க வேண்டிய 2 விடயங்களை எழுதுக.
03. முதன்மை நினைவகத்தின் தொழில் யாது?
04. தரப்பட்டுள்ள வர்த்தகக் குறியீடுகளுக்குப் பொருத்தமான பணிசெயல் முறைமைகளின் பெயர்களை எழுதுக.

1. 
2. 
3. 
4. 

(10 புள்ளிகள்)

www.lkedu.lk